## ஒருவர் உரிமைக்கு மற்றவர் மதிப்புக் கொடுங்கள்!

# உலகின் தலைசிறந்த மருத்துவர்கள் அரசுப் பள்ளியில் படித்தவர்கள்தான்!

## மறைமலைநகர் ஜெ.சண்முகம் இல்லத் திருமண விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**மறைமலை நகர், செப்.7-**

**சென்னை, மறைமலை நகர் தி.மு.க. நகரச் செயலாளர், நகர மன்றத் தலைவர் ஜெ.சண்முகம் இல்லத் திருமண விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு கிஷோர்குமார் - மோனிஷா இணையர் திருமண விழாவை நடத்தி வைத்து வாழ்த்திப் பேசினார்.**

அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மறைமலை நகர், நகரக் கழகச் செயலாளர், நகராட்சி மன்றத் தலைவர் ஜெ.சண்முகம் இல்லத் திருமண விழாவின் வாயிலாக, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

இன்றைக்கு திருமண பந்தத்தில் இணைகின்ற மணமக்கள் தம்பி கிஷோர்குமாருக்கும், தங்கை மோனிஷாவுக்கும் உங்கள் சார்பாக, என் அன்பையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்திற்கு சில மாதங்களுக்கு முன்பு மறைமலை நகருக்கு வந்திருந்தேன். அப்போது மறைமலை நகர் பகுதி மக்களுக்கு ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருந்தேன்.

### வெற்றி வேட்பாளர்

2024ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் காஞ்சிபுரம் தொகுதியில், நம் கழக வேட்பாளர் க.செல்வத்தை நீங்கள் மிகப்பெரிய வாக்குகள் வித்தியாசத்தில், வெற்றிப்பெற வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் உங்களிடத்தில் வைத்திருந்தேன். நீங்கள் அப்படி செய்தீர்கள் என்றால், `நான் அடிக்கடி மறைமலை நகருக்கு வருவேன்' என்ற வாக்குறுதியையும் கொடுத்திருந்தேன். கிட்டத்தட்ட 6 லட்சம் வாக்குகளை கழகத்திற்கு வழங்கி, நம் வேட்பாளரை நீங்கள் வெற்றிப் பெற வைத்தீர்கள். சொன்னதைப் போலவே நானும் வந்திருக்கிறேன்.

நம் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் இங்கு இருக்கிறார். காஞ்சிபுரம், திருப்பெரும்புதூர் என அவர் மாவட்டத்தில் வருகின்ற இரண்டு மக்களவைத் தொகுதிகளிலும் கழகம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது என்றால், அண்ணனின் தேர்தல் பணியை யாராலும் மிஞ்ச முடியாது.

இந்தப் பகுதியில் அண்ணன் சண்முகம் அவர்கள் சிறப்பாகத் தேர்தல் பணியாற்றி, கழகத்திற்கு மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுத் தந்தார். அண்ணன் சண்முகம் இளம் வயதிலிருந்தே கழகத்திற்காக உழைத்துக் கொண்டிருப்பவர்.

### இளைஞர் அணி

நம் தலைவர் அவர்கள், இளைஞர் அணிச் செயலாளராக இளைஞர் அணி தொடங்கிய போது அதன் உறுப்பினராகப் பணியாற்றியவர். இன்றைக்கு, நான் இளைஞர் அணியின் செயலாளராக அவரின் இல்லத் திருமணத்தில் பங்கேற்பதில் பெருமை அடைகிறேன்.

அண்ணன் அன்பரசன் அவர்கள் இந்த மறைமலை நகர் பகுதியில், கழகத்தைச் சிறப்பாக வழிநடத்தி வருகிறார். கிளைக்கழகப் பிரதிநிதி, பேரூர் பொறுப்புக் கழக உறுப்பினர், நகரக் கழகச் செயலாளர், நகர் மன்றத் துணைத் தலைவர், நகர மன்றத் தலைவர் இப்படிப் படிப்படியாக பொதுவாழ்வில் மக்களுக்காகவும், கழகத்திற்காகவும் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருப்பவர்.

### சுயமரியாதைத் திருமணங்கள்

கழகக் குடும்பங்களுக்கே உரிய வகையில், இந்தத் திருமணம் இப்போது ஒரு சுயமரியாதைத் திருமணமாக நடைபெறுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். `தமிழ்நாட்டில் சுயமரியாதைத் திருமணங்கள் நடைபெற வேண்டும்' என்று முழங்கிய, தந்தை பெரியார் பிறந்த மாதம் இந்த செப்டம்பர் மாதம்.

சுயமரியாதைத் திருமணங்களுக்குச் சட்டப்பூர்வமான அங்கீகாரத்தைத் தந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த மாதமும் இந்த செப்டம்பர் மாதம் தான். சுயமரியாதைத் திருமணம் நடைபெற காரணமாக இருக்கின்ற நம் திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்த மாதமும் இந்த செப்டம்பர் மாதம்தான். அப்படிப்பட்ட செப்டம்பர் மாதத்தில் திருமணம் நடைபெறுவது நம் அனைவருக்கும் பெருமையாக இருக்கிறது. மகிழ்ச்சியாக இருக்கிறது.



மணமக்கள் இருவரும் நன்றாகப் படித்தவர்கள். தம்பி கிஷோர் எம்.டெக் வரை படித்துள்ளார். மணமகள் சகோதரி மோனிஷா பி.ஆர்க். படித்துள்ளார். இருவரும் பொறியியல் பட்டதாரிகளாக உள்ளார்கள்.

### மகளிர் உயர்கல்வி

திராவிட இயக்கம் வளர்ந்த பிறகு, திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய பிறகுதான் கல்வி, குறிப்பாக உயர்கல்வி அதிக எண்ணிக்கையில் எல்லோருக்கும் போய் சேர்ந்து கொண்டிருக்கிறது. மகளிர் படிப்பதற்கான வாய்ப்புகளையும், வசதிகளையும் செய்து கொடுத்தது, நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சிக் காலத்தில்தான் அதிக அளவில் கல்லூரிகள் திறக்கப்பட்டன.

இன்று மகளிரின் மேம்பாட்டிற்காக நம் கழக அரசு, திராவிட மாடல் அரசு, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏராளமான திட்டங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

### விடியல் பேருந்துத் திட்டம்

நம் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும், கையெழுத்திட்ட முதல் கையெழுத்து எதுவென்றால், மகளிருக்குக் கட்டணமில்லா விடியல் பேருந்துத் திட்டம். இன்றைக்கு இந்தத் திட்டத்தின் மூலமாக 520 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் சேமித்துக் கொண்டிருக்கிறார்கள். மாணவிகள் பயனடையும் வகையில் அரசு பள்ளியில் படித்து உயர்கல்வியில் சேர்கின்ற 3 லட்சம் மாணவிகளுக்கு `புதுமைப்பெண்' என்ற திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கிக்கொண்டிருக்கிறார், நம் முதலமைச்சர் அவர்கள்.

நம் முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் `தமிழ்ப் புதல்வன்' திட்டத்தையும் தொடங்கி வைத்தார்கள். எப்படி மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகைக் கொடுக்கிறோமோ, அதேபோல் அரசு பள்ளியில் படித்து, உயர்கல்வியில் சேர்கின்ற 3 லட்சத்து 73 ஆயிரம் மாணவர்களுக்கும் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது, நம் திராவிட மாடல் அரசு.

### 20 லட்சம் குழந்தைகள்

பணிக்குச் செல்கின்ற மகளிர், காலையில் எழுந்து சமைத்துக் கொடுத்து பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவது எவ்வளவு சிரமம் என்று உங்களுக்குத் தெரியும். அதற்கு தீர்வாக நம் முதலமைச்சர் கொண்டுவந்த திட்டம்தான் `காலை உணவுத் திட்டம்'. இந்தத் திட்டத்தின் மூலம் இன்றைக்கு 20 லட்சம் குழந்தைகள், அரசு பள்ளிகளில் பயன்பெற்று வருகிறார்கள்.

எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக, `கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம்' மூலம் ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 16 லட்சம் மகளிர், பயன்பெற்று வருகிறார்கள்.

கடந்த செப்டம்பர் மாதம், நம் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இன்று இந்த செப்டம்பர் மாதத்துடன் கடந்த ஒரு வருடத்தில் மட்டும் 1 கோடியே 16 லட்சம் மகளிர் 12 ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தின் மூலம் பயனடைந்திருக்கிறார்கள்.

இப்படி மகளிர் தங்களின் வாழ்வில் மேன்மையடைய நம் கழக அரசு பார்த்து, பார்த்து திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இன்றைக்கு இந்தியாவிலேயே பணிக்குச் செல்கின்ற பெண்களில் 42 சதவிகிதம் பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற பெருமையை நாம் அடைந்திருக்கிறோம்.

அரசு பள்ளியில் படித்து வெளிநாட்டிற்கு உயர்கல்விப் பயிலச் செல்லும் மாணவர்களின், முதல் பயணச் செலவையும் அரசே ஏற்கும் என்று, நம் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு சிலர் நம் தமிழ்நாடு அரசின் பள்ளிப்பாடத் திட்டம் சரியில்லை என்று ஒரு புரள்யைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அரசு பள்ளியில் படித்த மயில்சாமி அண்ணாதுரை, வீரமுத்துவேல் போன்ற இஸ்ரோ விஞ்ஞானிகளாக உருவானார்கள். தமிழ்நாடு அரசு பள்ளியில் படித்த பலர் சிலிக்கான் வேலியில் கணிப்பொறி கம்பெனிகளில் உயர் பதவியில் வேலை செய்துக் கொண்டிருக்கிறார்கள்.

உலகின் தலைச்சிறந்த மருத்துவர்கள், தமிழ்நாடு அரசு பள்ளியில் படித்தவர்கள் தான். அதனால், இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத வயிற்றெரிச்சல் பிடித்தவர்கள்தான் நம் பாடத்திட்டத்தை இன்று குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அரசு பள்ளியில் படித்த 100க்கும் அதிகமான மாணவர்கள் ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம், என்.ஐ.டி போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள். நம் கல்வி முறையைக் குறை சொல்வது என்பது நம் மாணவர்களை, ஆசிரியர்களைக் குறை சொல்வதற்கு சமம். அதற்கு நம் திராவிட முன்னேற்றக் கழக அரசும், நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எந்த காலத்திலும் அதற்கு இடம் கொடுக்க மாட்டார்கள். இந்தியாவிலேயே சிறந்த கல்வி முறை என்று ஒன்று இருக்கிறது என்றால், அது கலைஞர் தந்த தமிழ்நாட்டு கல்விமுறை தான் என்பதை இங்கு நான் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சாதனைகள் எல்லாம் தொடர வேண்டும் என்றால், வருகின்ற 2026ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலிலும் நம் கழகம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றாக வேண்டும்.

அதற்கு அரசின் சாதனைகளை, திட்டங்களை இங்கு வந்திருக்கின்ற நீங்கள் ஒவ்வொருவரும் உங்களின் நண்பர்கள், உறவினர்கள், குடும்பத்தினரிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும்.

இந்த நேரத்தில் மணமக்களுக்கு ஒரு வேண்டுகோளை வைத்துக் கொள்ள விரும்புகிறேன். ஒருவரையொருவர் சுயமரியாதையுடன் நடத்த வேண்டும். ஒருவர் உரிமைக்கு மற்றவர் மதிப்புக் கொடுக்க வேண்டும். உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தைக்கு அழகான ஒரு தமிழ் பெயரைச் சூட்ட வேண்டும் என்று கூறிக்கொண்டு, மணமக்கள் இருவரும் பெரியாரும் சுயமரியாதையும் போல, காஞ்சிபுரம் அண்ணாவைப்போல, கலைஞரும் திராவிட முன்னேற்றக் கழகமும் போல, கழகத் தலைவரும் உழைப்பும்போல பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, வரலட்சுமி மதுசூதனன், சி.வி.எம்.பி.எழிலரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மூர்த்தி, தமிழ்மணி, இதயவர்மன், ஆர்.டி.அரசு மற்றும் நரேந்திரன், எம்.கே.டி.கார்த்திக், சந்தானம், லோகநாதன், படப்பை மனோகர், செம்பருத்தி துர்கேஷ், வசந்தகுமாரி, காமராஜ், உதயா கருணாகரன், தேன்மொழி நரேந்திரன், கழக இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், அப்துல் மாலிக், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கமலக்கண்ணன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.



சென்னை, மறைமலை நகர் தி.மு.க நகரச் செயலாளர், நகர மன்றத் தலைவர் ஜெ.சண்முகம் இல்லத் திருமண விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு கிஷோர்குமார் – மோனிஷா இணையர் திருமண விழாவினை நடத்தி வைத்து வாழ்த்திப் பேசினார். இதில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் சுந்தர், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, வரலட்சுமி மதுசூதனன், சி.வி.எம்.பி.எழிலரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மூர்த்தி, தமிழ்மணி, இதயவர்மன், ஆர்.டி.அரசு, நரேந்திரன், எம்.கே.டி.கார்த்திக், சந்தானம், லோகநாதன், படப்பை மனோகர், செம்பருத்தி துர்கேஷ், வசந்தகுமாரி, காமராஜ், உதயா கருணாகரன், தேன்மொழி நரேந்திரன், கழக இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், அப்துல் மாலிக், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கமலக்கண்ணன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.



ஆங்கிலேயர் ஆதிக்கத்துக்கு எதிராக உறுதியுடன் போராடிய ‘கப்பலோட்டிய தமிழர்’ வ.உ.சிதம்பரனாரின் 153–வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்துக்கு நேற்று முன்தினம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். நாட்டின் விடுதலைக்காகச் சிறையில் செக்கிழுத்த வ.உ.சி அவர்களின் தியாக வாழ்வை அடுத்தடுத்த தலைமுறையிடம் கொண்டு சேர்ப்போம். என்று பதிவு செய்தார். உடன் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, க.சுந்தர் எம்.எல்.ஏ., க.செல்வம் எம்.பி. உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





#Paralympics2024Paris இல் உயரம் தாண்டுதலில் வெண்கலப் பதக்கம் வென்றதற்காக, நமது பாரா தடகள சாம்பியன் மாரியப்பன் தங்கவேலுக்கு தொலைபேசியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்தார். மேலும் பாராலிம்பிக்கில் தொடர்ந்து மூன்றாவது முறையாக பதக்கம் வென்றதன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார். அவரது எதிர்கால முயற்சிகள் அனைத்திலும் தொடர்ந்து ஆதரவளிப்பதாக உறுதியளித்தார்.